பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 9 ஆவணி 1 றமழான் 1 இதழ்: 187

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-8-77

## பணிஸ், ரோஸ்பாண் விலைகளில் 5 சதம் குறைப்பு!

### உணவுப்பொருள் விலை இன்னும் குறையலாம்

கொழும்பு, செவ்வாய்

மாவின் விலையும், பாணின் விலையும் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ரோஸ் பாணின் விலையும், பணிஸ் விலையும் 5 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இடியப்பம் மற்றும் மாவிலிருந்து தயாரிக்கப்படும் பண்டங்களின் விலைகளையும் குறைக்கும்படி ஹோட்டல் உரிமையாளர்களை உணவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

உணவுப்பொருள்களின் விலையையும் துணிகளின் விலையையும் மேலும் குறைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனைசெய்து வருகிறது.

# யாழ். நகர் வீதிகளில் ராணுவம், கடற்படை ரோந்து!

## நிலைமை கட்டுக்கடங்கியது!

யாழ்ப்பாணம், புதன்

நேற்று அதிகாலையிலிருந்து பிற்பகல் வரை அல்லோலகல்லோலப்பட்ட யாழ்ப்பாண நகரம்; மூன்று உயிர்ச்சேதங்களுடனும், பெரும் பொருட்சேதத்துடனும் நேற்றுப் பிற்பகல் ஓரளவு அமைதியடைந்தது. காலையிலிருந்த கொந்தளிப்பான நிலைமை பிற்பகலுக்குப்பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நேற்று மாலை முதல் யாழ். நகரவீதிகளில் இராணுவமும், கடற்படையும் ரோந்துக் கடமையிலீடுபட்டனர். பொலிசார் பலரும் நிலையங்களுக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

### அதிகாரிகள் குழு வந்தது

கொழும்பிலிருந்து நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜயசிங்கா, பொலிஸ்மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயகா, இராணுவத் தளபதி திரு. சேபால அட்டிகல, பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. அனே செனிவரத்தின, அநுராதபுரம் பொலிஸ் அதிபர் திரு. லியனகே ஆகியோர் வந்திருந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர், உதவி அதிபர் ஆகியோரையும் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவக் கமாண்டரையும், கடற்படைத் தளபதியையும் சந்தித்துப் பேசினர். பலாலியிலுள்ள

### மாலையில் நடந்த மாநாடு

இராணுவ முகாமில் இச் சந்திப்பு நடந்தது. யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்திரு. ஏ ஏ ஜோசப் இந்த சந்திப்பில் கலந்துகொண்டு கடந்த இரண்டு தினங்களாக நடந்த சம்பவங்களை எடுத்துக் கூறியதுடன் உடனடியாக நவீனசந்தையில்பரவிக்கொண்டிருக்கும் தீயை அணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றுவற்புறுத்தினர். இதனைத்தொடர்ந்து இராணுவம், கடற்படையினர் உடனடியாகத் தீயை அணைப்பதற்கு அரசாங்க அலுவலக அதிகாரிகளுடன் அனுப்பப்பட்டனர். இராணுவமும் கடற்படையும் தங்களிடமுள்ள தண்ணீர்த்தாங்கி வண்டிகளுடன் விரைந்து தீயை அணைத்தனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ.எல். விஜயபாலா நேற்றுக்காலை முழங்காவிலுக்குச் சென்றிருந்தார். காலையில் யாழ் நகரில் நிலைமை கொந்தளிப்பான நிலையை அடைந்ததும் அரசாங்க அதிபரை அவசரமாக அழைத்துவர விசேஷ பிரதிநிதி ஒருவரை மேலதிக அரசாங்க அதிபர் அவசரமாக முழங்காவிலுக்கு அனுப்பிவைத்ததாகவும், யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர், உதவிஅதிபர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளமுடியாது போனதாகவும் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு. ரி. ஜயசிங்காவுடனும் உள்நாட்டமைச்சின் செயலாளருடனும் தொர்டர்பு கொண்டதாகவும் தெரிகிறது. இதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் சிலரும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடனும் தொடர்புகொண்டனர்.

செயலாளர் ஜயசிங்காவும் அதிகாரிகள் குழுவும் நேற்று நண்பகலுக்குப்பின் யாழ். நகருக்கு வந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கிச் சூட்டுக்கு மூவர் பலி; 21 பேர் காயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த கலவரத்தில் மூவர் பலியானார்கள். 21 இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும், வேறு காயங்களுடனும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞர் ஒருவர் 17ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மற்றொரு இளைஞர், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும்போதும்மரணமானார்.

மற்றொருவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட முன்னரே மரணமானாரென்று கூறப்படுகிறது.

21 இளைஞர்களில் சிலர், துப்பாக்கிப் பிடியினால் படுமோசமாகத் தாக்கப்பட்டிருந்தனரென்றும், சிலர் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்திருந்தனரென்றும் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சில இளைஞர்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியாததால் தனியார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். சிறுவன் ஒருவனும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானான் என்றும் கூறப்படுகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

## சில அசம்பாவித சம்பவங்கள்!

நேற்றுக்காலையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து, யாழ்நகரின் மத்தியில் சில அசம்பாவித சம்பவங்களும் நிகழ்ந்தன

வைத்தீஸ்வராவீதி - கே. கே. எஸ். வீதி சந்தியில் ஒரு பொலிஸ் 'டிரக்' முற்றாக எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது

ஸ்ரான்லிவீதியில், லிடோ தியேட்டர் முன்பாக ஒரு 'ஜீப்' முற்றாக எரிக்கப்பட்ட நிலையில் இருந்தது,

இவைகளைத்தவிர, ஸ்டான்லி வீதியில் பல இடங்களில் 'டயர்'கள் எரிக்கப்பட்டு; பெரும் கற்களினாலும் தகரப் பீப்பாக்களினாலும் தடைகள் போடப்பட்டிருந்தன.

கஸ்தூரியார்வீதி-ஸ்டான்லி வீதிச் சந்தியில் ஏராளமான பொருள்கள் குவியலாக எரிக்கப்பட்டு, பலமணி நேரமாக தீ கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

நேற்று இரவு சுமார் ஆறரை மணியளவில், ஸ்ரான்லிவீதியிலுள்ள கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் (சீ டபிள்யூ. ஈ.) தீபரவத் தொடங்கி சுமார் ஒரு மணி வரை பயங்கரமாக கொளுந்து விட்டெரிந்து கொண்டிருந்த போதிலும், பொதுக்களின் தீவிர முயற்சியால் இரவுஎட்டு மணியளவில் தீ மற்றைய கட்டிடங்களுக்கும் பரவாதமாதிரி கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டது.

ஆனாலும் கட்டிடத்தின் சில பகுதிகள் தீக்கிரையாகிவிட்டன.

யாழ். நகரின் முக்கியமான பாதைகளில் எல்லாம் தடைகள் போடப்பட்டிருந்தன.

## பூரண ஹர்த்தால்!

### அரசு அலுவலகங்கள் எதுவுமே இயங்கவில்லை

நேற்றுக் காலையில் யாழ். நகரில் நிகழ்ந்த துயர சம்பவங்களுக்கு ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்து, பல்வேறு அரசு அலுவலகங்களையும் சேர்ந்த ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர்.

யாழ் அரசாங்க செயலகத்தில் உள்ள எந்த ஒரு அலுவலகமும் நேற்று இயங்கவில்லை. நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில், ஊழியர்கள் அனைவரும் தத்தமது அலுவலகங்களிலிருந்து வெளியேறிவிட்டனர்

யாழ்ப்பாணம் தபால் அலுவலகமும் நேற்று செயல்படவில்லை. இதன் எதிரொலியாக தபாற் சேகரிப்பு யாழ். நகரில் நடைபெறவில்லை. தபாற்பைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று மாலை அனுப்பிவைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கான தொலைபேசித் தொடர்புகளும் ஸ்தம்பித்துப்போயிருந்தன.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் மற்றும் சில தொழிற் சங்கங்கள், நேற்றைய சம்பவங்கள் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன.

பொலிஸாரின் அட்டூழியம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு தாக்குதல் சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே அரசு ஊழியர்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர் என்றும் இந்தத் தொழிற்சங்கங்கள் கருத்து வெளியிட்டன.

நேற்று இரவு வழக்கம் போல யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இரவு 'மெயில், ரயில், புங்கங்குளம் ரயில் நிலையத்தில்; சுமார் ஒரு மணிநேரம் தாமதித்து இரவு எட்டரை மணிக்குத்தான்

[4 ம் பக்கம் பார்க்க]

### பஸ் சேவை பாதிப்பு

நேற்றுக் காலையில் நிறுத்தப்பட்ட பஸ்சேவை, இன்று நடைபெறுமா என்பது பற்றி (இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை) இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

ரயில்சேவையில் மாற்றம் இல்லை. வழமைபோல் காலையிலும் மாலையிலும் ரயில்சேவை நடைபெறும்.

# இந்திய ஆயுதப்படைகளின் பலம் அதிகரிக்கப்படுகிறது

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக 16 இந்திய விமான. கடல் தரைப்படைகளை நவீன ஆயுதங்களைக் கொண்டு வலுவாக்கும் முயற்சி களில் இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள் ளது.

இந்திய பாதுகாப்பு அமைச் சர் திரு. ஜெகஜீவன்ராம் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இந்திய சுதந்திர தினம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் விடுத்த செய்தியி லேயே மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

இந்தியா சகல அயல்நாடுக ளுடனும் சமாதானமாக வாழவே விரும்புகிறது. எனி னும் மற்றைய நாடுகளின் ஆக்கிரமிப்புக்களை முறியடிக் கவே பாதுகாப்பு நடவடிக் கைகளை பலப்படுத்த வேண் டிய அவசியம் ஏற்பட்டுள் ளது என்றும் அவர் கூறி ஞர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/14648

1. இராமலிங்கம் பரமநாதனும் பெண்
2. கைலநாயகியும் 64/4, ரயில் பாதை, யாழ்ப்பாணம்.

வழக்காளி

1. சின்னையா செல்லத்துரையும் பெண்.
2. பூரணமும் ஆஸ்பத்திரி ரோட், வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிராக

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 146148-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977-ம் ஆடி புரட்டாதி மீ 12 உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 12660ம் 1974-11-25 தொடக்கம் 1975-9-24 வரைக்கும் ரூபாய் 10000க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 653/75.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''களுத்தறுத்தானும் தலைமடையும்'' நி. பர. 1 குளி 2 கடைக்கட்டிடங்களும் வீடும் கிணறும் எல்லை கிழக்கு சின்னப்பு சுப்பையாவின் உரிமையாளருதைனம். வடக்கு ஆஸ்பத்திரிவீதி மேற்கு 1ம் குறுக்குத் தெரு தெற்கு வயித்திலிங்கம் நடராசாவினுதனம் D 268/269ல் பதியப்பட்டுள்ளது.

எஸ். சங்கரப்பிள்ளை,

கொமிஷனர் & விலைமதிப்பாளர்

"வேல்பதி'
புத்தூர்.
1-8-77

6864

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B/ 10825
பொன்னையா மகிளம், பொற்பதி ரோட்டு, கொக்குவில்.
—வழக்காளி

எதிராக

1. வல்லிபுரம் நடராசாவும் மனைவி
2. ஆச்சிமுத்து இருவரும் 2-ம் ஒழுங்கை பலாலி ரோட்டு கந்தர்மடம், யாழ்ப்பாணம். -எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10825-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8-9 77 வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2780/ம், 20-5-69 தொடக்கம் 17-3-70 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 295-15.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட இழக்கிறை அம்மன் கோவிலடி நி. ப. 4 குளி 10 7/8 உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T. சின்னத்துரையால் வரையப்பட்ட இல: 50/A படத்தின் துண்டு 3 இதில் நிந்தமாக நிர 1/3 தெற்குப் பக்கமாக இந்த நிந்த பரப்பு 1 1/2 ( Lms. V. C.) யும் செய்பயிர் வான்பயிர்களும் மற்று அதற்கு சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு சொல்லப்பட்ட பிளானில் துண்டு 8 என்னும் பொது ஒழுங்கை வடக்கு தெட்சணாமூர்த்தி பாலசுப்பிரமணியம் தற்போது சரவணை முத்துலிங்கத்துக்குரிய பிரிபட்ட இதன் மிகுதி ஆதனம், மேற்கு முருகேசு சோமசுந்தரம். தெற்கே சரவணை மாசிக்கண்டு. தெற்கேயிருக்கும் பிரதான ரோட்டுக்கு பொதுப்பாவிப்புக்கு (போக்குவரத்து) இப் படத்தில், துண்டு 8 என்னும் காணி நிர. 1 குளி 9, 5/8-ல் பங்கும். பதிவு இல. D 823/171

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.

கொமிஷனர், விலைமதிப்பாளரும்.

'வேல்பதி' புத்தூர்.
6-8-77

6865

### இன்றைய வானொலி நிகழ்ச்சிகள்

#### சேவை ஒன்று

காலை 6-05 சைவநற்சிந்தனை எஸ். திருநாவுக்கரசு, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 துதிப்பாடல், 7-00 இசைக் கோவை, 7-35 பாட்டு மாது சிரோன்மணி வேலாயுதர், 8-03 புல்லாங்குழல் வீணை நிலைய வித்துவான்கள்.

மாலை 6-20 இந்தோனேசியா தேசியதினம், 6-30 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி கரவையூர்ச் செல்வம், 6-45 நாடகம் 'தன்வினை' எல். திலகரத்தினம், 7-02 வாழ்வும்வளமும், 7-35 குன்றின் குரல் கு. இராமச்சந்திரன், 8-05 இஸ்லாமிய கீதம், 8-20 முஸ்லிம் உலக செய்திகள், 8-30 நூறுல் இஸ்லாம், 9-30 நாகசுரம் பி.எஸ். பிச்சையப்பா, 10-30 உங்கள் விருப்பம். நேயர்விரும்பியவை. (முஸ்லிம் நிகழ்ச்சி நேரம் மாற்றத்துக்குரியன).

### பதவியேற்பு வைபவம்

மாவிட்டபுரம், செவ்

'புதிய அரசின் செயல்திட்டங்களுக்கமைய சுதந்திரமான முறையில் பொது மக்களது தேவைகளை குறைவில்லாது நிறைவேற்றிவைப்பதில் இச் சங்கம் முன்னிற்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவதுடன் இச்சங்கம் மக்கள் தப்பபிப்பிராயம் வைக்காதமுறையில் இயங்க வழிவகுப்பேன்'.

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதியதலைவராகப் பதவியேற்ற வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா பதவியேற்பு வைபவத்தையடுத்து சங்க வளவில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

வலி.வடக்கு உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு தலைவர் பதவியை திரு. மகாதேவா ஏற்றார் சங்கபொது முகாமையாளர் திரு. சி. நவரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (உ)

மலேஷியன் கைமார்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

## "பாக். அரசியல்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குக"

இஸ்லாமாபாத், ஆக.16

''பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் ஆட்சிக் காலத்தில் கைதுசெய்யப்பட்டு இன்று வரை அரசியல் கைதிகளாக இருப்பவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குக''

இவ்வாறு பாகிஸ்தானின் எதிர்க்கட்சிக் கூட்டணியின் தலைமைக்காரியதரிசி ஜனுப் கபூர் அகமட் இராணுவ அரசைக் கேட்டுள்ளார். (இ)

5 ஆண்டுகளுக்குள்

## தீண்டாமைக் கறையை அடியோடு களையுங்கள்

### சுதந்திரதின வைபவத்தில் மொரார்ஜி வேண்டுகோள்

புதுடில்லி, ஆக. 16

'இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கிடையில் இந்தியாவிலிருந்து தீண்டாமை என்னும்கறையை வேருடன் களைந்தெறிய இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும். இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினர்.

இந்திய சுதந்திரதினத்தை ஒட்டி இன்று புதுடில்லி செங்கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே பிரதமர் திரு. மொரார்ஜி மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் காலஞ்சென்ற பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு முதல் சுதந்திரக் கொடியை நாட்டிய இடத்தில் நின்று திரு. மொரார்ஜி பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் முதல் தடவையாக உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளவந்த பிரதமரை பாதுகாப்பு மந்திரி திரு. ஜெகஜீவன்ராமும் டில்லிமேயரும் வரவேற்றனர்.

இராணுவ அணிவகுப்பு மரியாதையையும் பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

21 குண்டுகள் மரியாதை செலுத்துமுகமாக தீர்க்கப்பட்டன. (இ)

### 4,000 பேருக்கு ஜனதிபதி விருந்து

புதுடில்லி, ஆக16.

இந்தியஜனதிபதி திரு நீலம் சஞ்சீவ ரெட்டி நேற்று இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி 4 ஆயிரம் பேருக்கு விருந்தளித்து கௌரவித்தார்.

பிரதமர் அமைச்சர்கள், எம். பிக்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோர் இவ் விருந்தில் கலந்து கொண்டனர். (இ)

## ''பண்பாடு மாறினல் விபரீதம் விளையும்''

### கல்வி அதிகாரி செல்கிறார்

சங்கானை, செவ்.

''ஓர் இனத்தின் கலை கலாச்சாரம்தான் அந்த இனத்தின் பாரம்பரியத்தை பிரதிபலிப்பதாகும். இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தமது அளப்பரிய பொக்கிஷமான கலை கலாச்சாரத்தைப் பேணிக் காப்பதில் மிக அக்கறை ஆர்வம் உள்ளவர்கள். இதனை நாம் வடபகுதியில் எங்கு சென்றாலும் காணக்கூடியதாக இருக்கின்றது. அரசாங்கம் கலைப் பாடத்தைக் கட்டாய பாடமாக்கியபோது அதனை நாம் வரவேற்றோம் 6 ம் வகுப்பிலிருந்து கலை ஓர் பாடமாக சகல பாடசாலைகளிலும் கற்பிக்கப் பட்டுவருகின்றது. இதனுல் எமது சமுதாயம் எதிர்காலத்தில் பாரம்பரிய பொக்கிஷமான கலாச்சாரத்தை மேலும் வளர்க்க ஏதுவாக அமையும்.''

இவ்வாறு வட மாநில கல்வி அதிகாரி திரு. சு. சிவசுப்பிரமணியம் சங்கானை சிவப்பிரகாசமகாவித்தியாலய இரண்டாம் நாள் கலைவிழாவை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. ஆ. நாகராஜா தலைமையில் விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் மிகவேகமாக முன்னேறிவரும் உலகில் நாகரீகத்தில் தீவிரமாற்றம் ஏற்பட்டு வருவதை உணரக்கூடியதாக இருக்கிறது. பலவிடயங்களில் மாற்றங்களை நாளாந்தம் காணும் நாம் உடை அலங்காரத்திலும் நாளாந்தம் பலவிதமாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனல் எமது ஒழுக்கம், பண்பு, கட்டுப்பாடு போன்றவற்றில் மாற்றம் கண்டால் என்னவிபரீதம் எதிர்காலத்தில் ஏற்படுமோ தெரியாது தென அஞ்சவேண்டிய நிலையில் உள்ளோம். இதனை நாம் மேலை நாடுகளில் அவதானிக்கநேரிடுகின்றது. அவை எம் இனத்திற்கு ஒவ்வாதவை. இவைகளை முக்கியமாக மாணவர்கள் உணர்ந்து வாழ பெற்றோர் ஆசிரியர்கள் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்'' என்றார்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் 'நீதி பிறந்தது' என்ற நாடகமும் இடம்பெற்றது. (உ)

### அரசாங்கஅதிபர்கள்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு சி. அம்பலவாணர் பளை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். யாழ்ப்பாண மேலதிக உதவி அரசாங்க அதிபரான திரு. ஏ. செந்தில் வடிவேல் துணுக்காய் அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். பளை உதவி அரசாங்க அதிபர் திரு வி. எஸ். ஒகஸ்தின் நல்லூர் அரசாங்க உதவி அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். (கெ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**RIO** (யாழ்ப்பாணம்)

புதிய இயந்திரம் பொருத்தப்பட விருப்பதால் மறு அறிவித்தல் வரை காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டா.

**REGAL** Daily: at 4-45 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
Adventure & Excitement for the Whole Family!
CHARLTON HESTON
in
CALL OF THE WILD
(Color)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7698 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர் - சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**ராஜா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) போன்: 7180
முத்துராமன் - சுஜாதா
விஜயகுமார் - படாபட் ஜெயலக்ஷ்மி
நடித்த
**மயங்குகிறாள் ஒரு மாது**

**மனோஹரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா - நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நடித்த
**பட்டணத்தில் பூதம்**
(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)

19-ந் திகதி முதல்
சிவகுமார் சுஜாதா **அன்னக்கிளி**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா



**சத்யம்**


1973ம் ஆண்டின் 44ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283ம் பிரிவின் கீழ் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கை பொறுப்பாளர் முன்னிலையில்

மலேசியா கோலாலம்பூரில் இறந்த சுழிபுரம் கிழக்கு என்னுமிடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கதிரவேலு என்பவரின் மரணசாதன மில்லாத மரணச் சொத்தினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
கதிரவேலு பாலசிங்கம், சுழிபுரம் கிழக்கு.
விண்ணப்பகாரர்.

வலையம்
இலக்கம் T/359

எதிராக

கதிரவேலு கைம்பெண் சிவபாக்கியம், சுழிபுரம் கிழக்கு.
எதிர்வாதி.

1977ம் ஆண்டு வைகாசி மாதம் 6ந் திகதியைக் கொண்ட 281ம் பிரிவின் கீழான விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக் கூற்றுக்கள், பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்தமையால், மேலதிகப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் வழங்கிய அதிகாரப்படி யாழ்ப்பாண வலையத் தத்துவப் பத்திர அதிகாரி நா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது.

இக்கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறுள வராவது 1977ம் ஆண்டு ஆடி மாதம் 7ந் திகதி அல்லது அதற்கு முன் தக்க காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி;

மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச் சென்ற மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மகன் என்ற வகையில் நிருவாகப் பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவரென்றும் அவ்வண்ணம் அவருக்கு நிருவாகத் தத்துவப் பத்திரமும் வழங்கப்படுகிறதென்றும்.

இத்தால் 283 (1) (2)ம் பிரிவின் கீழ் செயற்பட்டுக் கட்டளையிடுகிறேன்.

1977ம் ஆண்டு வைகாசி மாதம் 6ந் திகதி.

மா. கணபதிப்பிள்ளை/ஒப்பம்
தத்துவப் பத்திர அதிகாரி.

7 7-77.
காரணம் காட்டுவதற்கு 22-8-77ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மா. கணபதிப்பிள்ளை/ஒப்பம்
தத்துவப்பத்திர அதிகாரி
6868


**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00 9-30
CRAZY BOYS AT THE SUPER MARKET

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சொராப்-கீதாஞ்சலி
**காத்திருப்பேன் உனக்காக**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
TARZAN'S JUNGLE REBELLION


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தொளி எழுதிய 1977 பொதுத்தேர்தல் முடிவுகள் கூடும் சுவையுமான வெற்றியும் தோல்விகளும் அடங்கிய நூல் நாளை நம்பீத விலைசதும் ரூ1 தமயந்தி பதிப்பகம் அச்சுவேலி. க. சிவபாதம் புத்தொளி, அச்சுவேலி 6867

## தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

## 31-ம் நாள் நினைவாஞ்சலி

செல்வி. நடராசா, கலைவாணி



| தோற்றம் | மறைவு: |
|---|---|
| 13 | 18 |
| 7 | 7 |
| 1950 | 1977 |

எங்கள் இதயதெய்வமே உன் பிரிவாற்றுமை தாழாமல் இன்னும் அழுது புலம்புகின்றோம். அந்திரட்டி தினமான இன்று உன் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். அன்பு, அப்பா, அம்மா, அக்கா, அத்தான் தம்பி, மகா, நவம், காஞ்சனா, சடாகேதா.

66/6, இந்துமகளிர் வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
6859

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

துரையப்பா சிவபாக்கியம், திருகோணமலை.
தற்போது அச்சுவேலி.
வாதி

எதிராக

இல ஈடு/13218

1. சுந்தரேஸ்வர ஐயரும்
2. பெண் மங்களகௌரியும், இருவரும், கந்தசாமி கோவிலடி, திருகோணமலை.
பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் ஈடு/13218ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ந் திகதி (2-9-77) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக 9,750/- ரூபா. இன்னும் ஐயாயிரம் (5000/-) ரூபாவிற்கு 1972ம் ஆண்டு ஆடி மாதம் 6ந் திகதி தொடக்கம் 20-2-1973 வரைக்கும் நூற்றுக்கு 15 வீத வட்டியும், கூட்டிய தொகைக்கு 20-2-1973 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 496/80 சதமும் (நடைபெற்ற செலவு 291/- நடைபெறவேண்டிய செலவு 107/75 சமயா சமயச் செலவு 98/05). இதில் செலவால் கொடுத்த 490/- ரூபா போக மிகுதி.

### ஆதன டாப்பு

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் வடக்கிறை 'நலப்புரை' நிலபர. 6. இதில் நிலபர. 1½ சித்திர வேலாயுதசுவாமிகோயிலுக்கு விடப்பட்டு மிகுதி நிலபர. 4½ல் தெற்கு அரைவாசி நிலபர. 2¼ வீட்டில் அறைகளும் கிழக்கேயிருக்கும் விறுந்தையின் அரைவாசியும் எல்லை கிழக்கு சித்திர வேலாயுதர் கோவில் வீதி, வடக்கு இதன் மிகுதிப் பங்கு ஆதனம், மேற்கு வைரவி வேலுப்பிள்ளையினதனம், தெற்கு சோமசுந்தர ஐயர் சுப்பிரமணியக்குருக்களுக்கும் பெண் இரத்தின சௌந்தரம்மாவுக்குமுரியவாதனம். இதடங்கலும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

'அகிலகம்'
28/1, யாழ் ரோட்,
யாழ்ப்பாணம்.
6869


**சாந்தி** ஃ நாகேஸ்வரராவ் ஃ ரேலங்கி ஃ அஞ்சலிதேவி ஃ ரங்கராவ்
யாழ். நகர்
போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
**செஞ்சுலக்ஷ்மி**

**ராணி** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**
(புதிய பிரதி)

# ஈழநாடு

THE EELANADU


## ஹர்த்தால் அனுஷ்டிக்க இளைஞர் கோரினர்!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை நடந்த கலவரத்தில் யாழ்ப்பாண பழையமார்க்கட் கட்டடங்கள் யாவும் எரிந்து தரைமட்டமாகின. நவீன மார்க்கட்டின் ஒரு பகுதியும் நீக்கிரையானது சுமார் 10பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை இனந் தெரியாத ஒரு கோஷ்டியின ரால், பழைய மார்க்கட்டில் உள்ள பாங்கடைகள் தீவைக் கப்பட்டதைத் தொடர்ந்து இக்கலவரம் மூண்டதாகக் கூறப்படுகிறது.

இக்கலவரத்தில் 21 பேர் துப்பாக்கி சூட்டில் காய மடைந்தார்கள் எனக்கூறப் படுகிறது.

மின்சாரநிலைய வீதியிலுள்ள தையல்கடைகள், வாழைப் பழக்கடை, கருப்பட்டிக்கடை, வெற்றிலைக்கடை யாவும் எரிந்து தரைமட்டமாகின.

காலை 8-30 மணியளவில், இளைஞர்கள், கோஷ்டிகோஷ்டி யாகச் சென்று கடைகளைப் பூட்டி, பொலிசாரின் அட்டூழி யத்திற்குஆட்சேபந்தெரிவித்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரினர்கள் யாழ். எம். பி. யோகேஸ்வரனும் அங்குவந்தி ருந்தார்.

பின்னர் எதிர்க்கட்சித்தலை வர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம்எம் பி. திரு. வெ யோகேஸ்வரன், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் முன்னாள் மேயர் திரு. சி. நாக ராசா ஆகியோர் நிலைமையை நேரில் பார்த்தனர் அச்சமயம் அங்கு வந்த பொலிஸ் அதிபரு டனும் திரு. அ. அமிர்தலிங்கம் பேசினர்.

அச்சமயம் அங்கு கடமைக்கு வந்த இரு பொலிசார் ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட் டதாகவும், பொலிஸ்ஜீப்வண் டிக்கு கற்கள் வீசப்பட்டதாக வும் கூறப்படுகிறது.

பழைய மார்க்கட் எரியும் சமயம், அங்கு வந்த இளைஞர் கள், வாளியில் தண்ணீர் கொண்டுவந்து தீயை அணைக்க முயற்சி எடுத்தனர். அவர் களின் முயற்சியினால் பழைய மார்க்கட்டின் பழக்கடைப் பகுதி தீபரவாமல் தடுக்கப்பட் டது.

காலை 8 மணிக்கே யாழ். நகர் நோக்கி வந்த பஸ்கள் யாவும், நகரத்திற்கு செல்ல விடாமல் ஒவ்வொரு சந்தியி லும், இளைஞர்களால் திசை திருப்பிவிடப்பட்டது. இதனால் அவ்விடத்தில் பிரயாணிகள் இறங்கி யாழ் நகருக்கு ஒழுங்கை வழியாகவும், காணி கள் வழியாகவும் நடந்துசென் றனர்.

சந்திக்குச் சந்திபழைடையர் களை அடுக்கி தீமூட்டியதுடன் கம்பங்களையும் கற்களையும், ரோட்டுக்கு குறுக்கே போட் டுத் தடுக்கப்பட்டிருந்தது.

யாழ். நகர் எங்கும் ஒரே புகை மண்டலமாகக் காட்சி யளித்தது. கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. பஸ் நிலையம் எங்கும், ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

மின்சார நிலைய வீதியில் பழைய மார்க்கட் வீதியில், பழைய மார்க்கட்டில் உள்ள சிறிய கடைகளில் உள்ள சாமான்களை இளைஞர்கள், தீ பிடிக்காமல் வெளியில் எறி ந்து கொண்டிருந்தனர். அச் சிறிய கடைகளின் உரிமை யாளர்கள், அரைகுறையாக எரிந்த சாமான்களை வீட்டுக்கு எடுத்து சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கான வாலிபரின் உடலை ஒரு பலகையில் வளர்த்தி வாலிபர் கள் மானிப்பாய் வீதிவழியாக சுமந்து கொண்டு வந்து வான் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரி க்கு அனுப்பினார்கள். ஆனால் அந்த வான் யாழ். ஆஸ்பத் திரிக்கு செல்ல முடியாமல் திரும்பி தெல்லிப்பளை ஆஸ் பத்திரி நோக்கிச் சென்றது.

ஆத்திரம் கொண்ட ஒரு கோஷ்டியினர், காங்கேசன் துறை வீதியிலுள்ள 'சலுசல' ஸ்தாபனத்தை உடைத்து சாமான்களை ரோட்டில் போட்டு, கொழுத்தினர் அதே போல், ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விஸ்தா பனத்திலுள்ள சாமான்களை யும் எடுத்து ரோட்டில் போட்டு எரித்தனர். மற்றும் சில கடை களும் சேதப்படுத்தப்பட்டது. பலர் இப் பொருட்களை எடுத் துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் எங்கும் நேற்று ஒரே பரபரபாக காட்சி யளித்தது பஸ்கள் ஓடவில்லை தியேட்டர்களில் படம் ஓட வில்லை கடைகள் யாவும் பூட்டப்பட்டன. பள்ளிக் கூடங்கள்காலைபத்து மணியுடன் பூட்டப்பட்டன.

பாடசாலை பஸ்களில் வந்த மாணவர்கள் வீடு செல்ல முடியாமல், வீதிகளில் நின்று தவித்தனர். சில பாடசாலை களில், மாணவர்கள் மாலை வரை தங்கியிருந்தனர். (கீ)

## துப்பாக்கிச்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

### அடையாளம் காணப்படவில்லை

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி யானதாகக் கூறப்படும் இரண்டு பேர் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அடையாளம் காணப்பட வில்லை.

இறந்துபோன மற்றுமொரு வர் வயதானவர். இவரும் அடையாளம் காணப்பட வில்லை.

### காயமடைந்தோர் விபரம்

துப்பாக்கிச் சூட்டினாலும் வேறுவிதமாகவும் காயமடைந் தவர்கள் விபரம் வருமாறு.

இவர்கள் அனைவரும் யாழ்ப் பாணம் ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

1. செல்லப்பா (புங்குடுதீவு) 2. சுப்பிரமணியம் (புங்குடு தீவு), 3. சண்முகநாதன் (களபூமி, காரைநகர்), 4. கனக சபை (மானிப்பாய்), 5. இராம நாதன் (நெடுந்தீவு), 6. எதிர் வீரசிங்கம் (நாவாந்துறை), 7. உதயகுமார் (புன்னாலைக்கட் டுவன்), 8. லோகநாதன் (செம்மணி வீதி, யாழ்ப்பா ணம்), 9. இரத்தினராஜா (கண்டி வீதி, யாழ்ப்பாணம்), 10. ஜெகநாதன் (கந்த ரோடை, சுன்னாகம்), 11. மகாலிங்கம் (வேம்படி வீதி, யாழ்ப்பாணம்). 12. கந்தையா (மானிப்பாய்), 13. விஜயகுமார், (யாழ். வீதி யாழ்ப்பாணம்) 14 .பாலகிருஷ் ணன் (கொட்டடி) 15. வரத ராஜா, ஆத்திசூடிவீதி, யாழ்ப் பாணம், 16. சூரியகுமார், (யாழ்.வீதி யாழ்ப்பாணம்) 17 கோ. பாலகிருஷ்ணன், - ]அல் லைப்பிட்டி], சத்திய நாதன் [சரவணை மேற்கு] 19. ராஜன் [மின்சார நிலைய வீதி முதல் ஒழுங்கை, யாழ்ப்பா ணம்] 20 அமலநாதன் மார்க் கண்டு, 21 சண்முகநாதன்.

### சாட்சியம் அளிக்கலாம்

நேற்று நடைபெற்ற சம்ப வங்களை நேரில் கண்டவர்கள் சாட்சியமளிக்க விரும்பினால் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனுடன் இன்று நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின் றனர். மரண விசாரணைகள் இன்று நடைபெறும்.

## யாழ். நகர் வீதிகளில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கஅதிபர் திரு. விஜய பாலாவும் வந்து இக்குழுவுடன் நிலைமையைப் பார்வையிட் டார்.

இதன் பின் நேற்று மாலை யில் அரசாங்கச் செயலகத்தில் டந்த ஒரு மகாநாட்டில் கொழும்பிலிருந்து வந்த குழு வினருடன் யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸ் அதிப ரும், எதிர்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவருமான திரு. அமிர்தலிங்கம், சாவகச் சேரி எம் பி. திரு வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை, யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோ ரும் கலந்துகொண்டனர்.

விரும்பத்தகாத சம்பவங்கள் தொடங்கியதும் இதன் நிலைமை பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் அதிகாரிகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் எடுத் துக் கூறப்பட்டதென்றும் பொலிஸ் பகுதியினர் உடன் தகுந்த நடவடிக்கை எடுத் திருந்தால் நிலைமை இந்த அள வுக்குப் போயிருக்காதென்று திரு. அமிர்தலிங்கமும் மற்றை யோரும் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

யாழ். நகரில் நடந்த சம்ப வங்களையும் அவர்கள் விபர மாக எடுத்துக் கூறியதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு. ரி. ஜெயசிங்காவுடன் திரு. அமிர்தலிங்கம் உரை யாடும்போது, எரித்துவிட்ட நெருப்பைத் தணிக்கவேண்டு மென்றும், பொலிசாரை வீதி களிலிருந்து நீக்கவேண்டுமென் றும், இந்த அட்டூழியங்கள் பற்றிப் பகிரங்க விசாரணை நடத்திக் குற்றம் புரிந்தவர் களைத் தண்டிக்கவேண்டுமென் றும் இது பற்றிப் பிரதமர் ஓர் அறிக்கை விடவேண்டு மென்றும் திரு அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார்.

முன்னர் நடந்த இதுபோன்ற சம்பவங்கள் பற்றி விசாரணை செய்யப்படாததுதான் இது போன்ற செயல்களுக்குக் கார ணம் என்றும் திரு அமிர்த லிங்கம் கூறினர்.

## அநுராதபுர அதிபர் பொறுப்பில்

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸார்அனைவரையும் இட மாற்றம் செய்யவேண்டுமென் றும் தமிழர் விடுதலைக் கூட் டணி எம். பிக்கள் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

பின்னர் இப்போது தோன் றியுள்ள நிலைமையைச் சமா ளிக்கும் பொறுப்பு அநுராத புரம் பொலிஸ் அதிபர் திரு. வியனகேயிடம் ஒப்படைப்ப தென ஏற்றுக் கொள்ளப்பட் டதாகவும் தெரிகிறது.

யாழ். நகரில் வீதிகளில் போடப்பட்டிருந்த தடைகளை நீக்கியதுடன் கட்டிடங்களில் பிடித்த தீயையும் கொமாண் டர் அண்ட்ரு தலைமையிலான கடற்படையைச் சேர்ந்த சிலோன் எலக்றிக்கல் மெக்கா னிக் என்ஜினியரிங் 'பிரிவின ரும் வடபகுதி இராணுவக் கொமாண்டர் காப்டன் விய னகே தலைமையிலான 'ஆட்டி லறி'பிரிவினரும் தீ அணைப்ப தில் ஈடுபட்டனர். (கூ)

## கான்ஸ்டபிள்கள் தாக்கப்பட்டனர்

நேற்று முன்தினம் அதிகாலை யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் தொடங்கிய தாக்கு தல் சம்பவங்கள் நேற்று அதி காலையும் தொடர்ந்து, யாழ் நகரின் பஜார்பகுதியில் பாதிக் கப்பட்டவர்களுக்கு அனுதா பம் தெரிவித்தும் அட்டூழியத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடையடைப்புச் செய்த னர். இச்சமயத்தில் பஸ் நிலையத்திற்கு வந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களைச் சிலர் தாக்கியதுடன் துப்பாக் கியையும் பறித்துச் சேதப் படுத்தினராம். மற்றுமொரு பொலிஸ் அதிகாரியும் தாக்கப் பட்டதாகத் தெரிகிறது.

## அதிகாலையில் ஏற்படுத்திய சில சேதங்கள்

யாழ்ப்பாணம், புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்கு நேற்று அதி காலை இனந்தெரியாத ஒரு கோஷ்டியினர் மண்ணெண்ணை ஊற்றி தீமூட்டினர். அயலவர் கள், உடனடியாகத் தீயை அணைத்துவிட்டனர்.

இக்கோஷ்டியினர் நேற்று அதிகாலை, கார்கள், கடைகள், டிராக்டர்களை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

சுபாஸ்கபே, ஹட்டன் நாஷனல்வங்கி, மற்றும் பல கடைகள் சேதப்படுத்தப்பட் டன. றீகல் தியேட்டருக்கு அரு கிலுள்ள கடையொன்று தரை மட்டமாக்கப்பட்டுள்ளது.

இக்கோஷ்டியினர் தங்களை அடையாளம்காணுதபடி தலைப் பாகை கட்டி வந்தனரென்று கூறப்படுகிறது.

இக்கோஷ்டியினர் கொண்டு வந்த பொல்லுகளை சில கடைக்காரர்கள் எடுத்துவைத் துள்ளனர். இக்கோஷ்டினர் வந்த ஜீப்வண்டியின் இலக்கத் தையும் கடைக்காரர் குறித்து வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் 2-ம் படக்காட்சி பார்த்து வந்த வர்களையும் ஒரு கோஷ்டியி னர் வழிமறித்து தாக்கியதா கவும் கூறப்படுகிறது. இத் தாக்குதலில் 75 வயதான செல்லப்பா என்பவரும், சுப் பிரமணியம் என்பவரும் காய மடைந்தவர்.

பெரியகடை பகுதியில் உள்ள சோமசுந்தர புலவரின் சிலையின் கையும் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

## பூரண—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டது. இனம் தெரி யாத சிலர் ரயிலுக்குள் நுழை ந்து, ரயிலின் சிற்றுண்டிச் சாலைக்குள்புகுந்து பலத்தசேதம் ஏற்படுத்தியதை தொடர்ந்தே ரயில் அங்கிருந்து தாமதித் துப் புறப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

யாழ். நகரின் ஓரிரு தேநீர்க் கடைகளைத் தவிர மற்றைய எல்லாக் கடைகளும் நேற்று பூட்டப்பட்டிருந்தன.

## கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், புதன்

யாழ். வைத்தீஸ்வரா வித்தி யாலய உயர்கல்வி மாணவர் கள் இம்மாதம் 27ம் திகதி கல்விச்சுற்றுலா வொன்றை மேற்கொள்ள விருக்கின்றனர். இவர்கள், சரித்திரப்பிரசித்த பெற்ற இடங்களையும், அகழ் வாராய்ச்சி இடங்களையும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை களையும் பார்வையிடுவார்கள். (கே)

## பண்ணிசை மாமணிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை ரீதியில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீ னம் பன்னிருதிருமுறைப் பண் ணிசை மாமன்றத்தின் பண் ணிசை மாமணிப் பட்டத்துக் கான பரீட்சைகள் நடை பெற்றுள்ளன.

முதலாம் இரண்டாம், ஆண் டுப் பரீட்சைகளுக்கு, யாழ்ப் பாணம், கொழும்பு, அனுராத புரம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து நானூறுக் கும் அதிகமான மாணவர் கள் தோற்றியுள்ளனர்.

நல்லை ஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய சுவாமிகளது தலை மையில் திருமதி பூமணி இராச ரத்தினம், திருவாளர்கள் என், அரியநாயகம், கா. சிவசுப்பிர மணியம், அ. கி. ஏகாம்பர மூர்த்தி, என். ஆர். திருஞான சம்பந்தன் ஆகியோர் மத்தி யஸ்தர்களாக கடமையாற்றி னர். (கெ-உ)

## 100 வயதுக்கு மேல்வாழும் இரகசியம்

திபிலிஸி, ஆக 16

உலகில் நூறு வயதுக்கும் மேற்பட்டவர்கள் அதிகமாக வாழும் பிரதேசமாக ரஷ்யா வில் உள்ள கோகேசஸ் திகழு கின்றது.

இங்கு ஏறத்தாழ 100 வய துக்கு மேற்பட்டவர்கள் 5,000 பேர் வாழ்கின்றனர். இவர்களில் மூன்றிலிரண்டு பங்கினர் பெண்களாம்.

ஜோர்ஜியா விஞ்ஞானி களின் கருத்துப்படி 100 வய தைத் தாண்டியவர்களில் பெரும்பான்மையோர் கிரா மப் புறத்தவர்கள்.

இவர்களின் நீண்ட வாழ்க் கையின் இரகசியம் இவர்களது சளையாத உழைப்பும், உண வாக அதிகம் கனி வகைகளை யும் மரக்கறியையும் உட் கொள்ளுவதுமேயாகும்.

## லண்டனில் இயங்கும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

லண்டன், ஆக. 16

லண்டன் மாநகரில் இயங் கும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி தமது இரண்டாவது ஆண்டுவிழாவை விரைவில் வெகுவிமரிசையாக நடாத்த வுள்ளது.

இளம் சிறார்களுக்குதமிழைப் போதிப்பதற்காக ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலை இன்று நூற்றுக்கணக்கான சிறார்களுக் குப் போதனை நடாத்துகின் றது.

இதன் வகுப்புகள் காலை 9 மணிமுதல் 1மணிவரை நடை பெறுகின்றன. விழாவினை யொட்டி சிறப்புமலரொன்றை வெளியிடவும் முடிவுசெய்யப் பட்டுள்ளது.

இம்மலருக்கு உலகமடங்கி லும் வாழும் தமிழ்மக்கள் கதை, கவிதை, கட்டுரை நாட கங்களை எழுதி இம்மாதம் 20-ம் திகதிக்குள் அனுப்பு மாறு விழாக்குழுவினர் கோரி யுள்ளனர். (கெ-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் கிலவ்லோவில் மேலைவீதி 63-ம் இலக்கத் திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka